செ.வெ.எண்: 29 நாள்: 10.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற சித்த மருத்துவ முகாமில் 545 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை, புதுக்கோட்டை சார்பில் இலவச சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த இலவச சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சியினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் தமிழகஅரசு உத்தரவின்படி இலவச சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த சித்த மருத்துவ முகாமில் 545 நோயாளிகளுக்கு கை, கால், மூட்டு வலி, சளி, இருமல், ஆஸ்துமா, அரிப்பு, கரப்பான், நீரிழிவு நோய், தொழுநோய் போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு 5 மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இம்முகாமில் அமைக்கப்பட்டிருந்த மூலிகை கண்காட்சியில் நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் மூலிகை மருந்துகள், நஞ்சுநீக்கும் உணவுப்பொருட்கள், சித்த மருத்துவத்தில் புண் சிகிச்சை, நுரையீரல் நோய்களுக்கு சிகிச்சை, நோய் நீக்கும் வர்ம சிகிச்சை, சுகப்பிரசவம், சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் மூலிகைச்செடிகள், மூலிகை குடிநீர், சிறுநீரக கற்களை கரைக்கும் மூலிகைகள், ரத்தக்கொதிப்பை கட்டுப்படுத்தும் உணவுகள், நவதானியங்கள், தாய்ப்பாலை பெருக்கும் மருந்து, சர்க்கரை நோய் மற்றும் ரத்தக்கொதிப்பிற்குரிய யோகாசனங்கள் போன்ற பல்வேறு சித்த மருத்துவ முறைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

மேலும் சித்த மருத்துவத்தில் நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மூலிகைச்செடிகளான சிறுகுறிஞ்சான் (சர்க்கரை), மணத்தக்காளி (பசியின்மை, வயிற்றுப்புண்), நாவல், முடக்கத்தான், கைவேளை, குப்பைமேனி, அம்மான்பச்சரிசி, பிரண்டை, சிற்றரத்தை, கொழிஞ்சி, புங்கன், வெட்டிவேர், ஓமவல்லி போன்ற பல்வேறு மூலிகைச்செடிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் பொதுமக்கள் அனைவரும் உடலுக்கு நன்மை பயக்கும் சித்த மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதுடன் உடல்நலனை பாதுகாக்கும் இயற்கை மூலிகைகள் மற்றும் உணவுகள் குறித்து அறிந்து பயன்பெற்று நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இம்முகாமில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.எஸ்.காமராஜ், சித்த மருத்துவர்கள் மரு.சரவணன், மரு.ஜெகன்நாதன், மரு.அமுதமீனா, மரு.சித்ரா, மரு.தனபதி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.துரைராஜ், திருமதி.அமுதாபாலு, ஆத்மா குழுத்தலைவர் திரு.பால்ராஜ், வட்டாட்சியர் திருமதி.கிருஷ்ணவேணி, ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.கார்த்திக்பிரபாகரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**